2005 பிப்ரவரி 2]

தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியானது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட கிராமங்களை எல்லையாகக் கொண்டுதான் சிறந்த முறையில் செயலாற்றி வருகிறது. ஆகவே, சிக்கப்பூவத்தி கிராமத்தை அதிலிருந்து பிரித்து, தனியாக ஒரு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி அமைக்கும் திட்டம் ஏதும் தற்போது அரசின் கவனத்தில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 7, டாக்டர் சி. விஜயபாஸ்கர், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்.

7—

குடமுழுக்கு

***44619—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை தொகுதி, கந்தர்வக்கோட்டையிலுள்ள பெருமாள், சிவன் மற்றும் முத்துமாரியம்மன் ஆகிய கோயில்களுக்குக் குடமுழுக்கு நடத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வக்கோட்டை வட்டம் மற்றும் நகர் அருள்மிகு ஆபத்சகாயேஸ்வரர் திருக்கோயில், அருள்மிகு கோதண்டராமர் திருக்கோயில் மற்றும் அருள்மிகு முத்துமாரியம்மன் திருக்கோயில் ஆகிய இம்மூன்று திருக்கோயில்களும், புதுக்கோட்டை அருள்மிகு மனோன்மணியம்மன் திருக்கோயிலின் தொகுப்புக் கோயில்களாகும். இத்திருக்கோயிலுக்கு மிகக் குறைந்த அளவே வருவாய் பெறப்படுகிறது. இத்திருக்கோயில்களுக்குத் திருப்பணி செய்ய சுமார் 13 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் தேவைப்படும் என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. இத்திருக்கோயில் கிராமப்புறத்தில் அமைந்துள்ளதால் திருப்பணிக்குத் தேவையான

[2005 பிப்ரவரி 2

தொகையைப் பொது மக்களிடமிருந்து நன்கொடை பெற இயலாத நிலை உள்ளது. இருப்பினும், உடனடியாகத் திருப்பணிக் குழு அமைத்து, அரசு மானியம் அல்லது ஆணைய பொது நல நிதியிலிருந்து நிதி ஒதுக்கீடு செய்ய இயலுமா என்று பரிசீலிக்கப்பட்டு வருகிறது என்பதைத் தங்கள் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

டாக்டர் சி. விஜயபாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆலயங்களிலே அன்னதானம், மூவாயிரம் கோயில்களுக்கு மேலே குடமுழுக்கு விழா, ஏறத்தாழ ஆறாயிரம் ஆதிதிராவிடக் கோயில்களுக்கு ரூ.25 ஆயிரம் நிதியுதவி என ஆன்மீகப் புரட்சி செய்து கொண்டிருக்கக்கூடிய மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியிலே கந்தர்வக்கோட்டையிலே உள்ள மிகப் பழம்பெருமை வாய்ந்த பெருமாள் மற்றும் சிவன் கோயில்கள், ஏறத்தாழ 100 ஆண்டுகளுக்கு முன்னாலே அந்தக் கோயில்கள் எல்லாம் கட்டப்பட்டு, அதற்குப் பின்னாலே கோயிலின் முன்மண்டபங்கள் எல்லாம் நிறையச் சிதிலமடைந்து, இன்றைக்குச் சீர்செய்யக்கூடிய அவசியமான நிலையிலே இருந்துகொண்டிருக்கின்றன. அங்கே இருக்கக்கூடிய ஏழையெளிய மக்கள் எல்லாம், அங்கேயுள்ள அந்த மண்டபத்திலேதான் திருமணங்களை நடத்திக்கொண்டிருக்கிறார்கள். ஆக, அந்த பக்தகோடிகளின் வேண்டுகோளுக்கிணங்க இன்றைக்கு இந்தக் கோரிக்கையை, அதாவது குடமுழுக்கு நிறைவேற்றப்படுமா என்கின்ற இந்தக் கோரிக்கையைப் பரிசீலனை செய்வோம் என்று மாண்புமிகு அமைச்சரவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அதற்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதுபோல, பொது மக்கள் அங்கே பங்களிப்புத் தொகையைக் கொடுத்து, அதற்குண்டான உபயதாரர்களைத் தயார் செய்து நாங்கள் உதவி புரிகின்றபோது, எவ்வளவு காலத்திலே இந்தக் குடமுழுக்கு விழாவிற்கு அரசும் தன்னுடைய பங்களிப்புத் தொகையைக் கொடுத்து நிறைவேற்றித் தரும் என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வக்கோட்டை வட்டம் மற்றும் நகர் அருள்மிகு ஆபத்சகாயேஸ்வரர் திருக்கோயில், அருள்மிகு கோதண்டராமர் திருக்கோயில் மற்றும் அருள்மிகு முத்துமாரியம்மன் திருக்கோயில் ஆகிய மூன்று திருக்கோயில்களுக்குச் சிறிதளவு நிலங்கள் இருந்தாலும், அவை வானம் பார்த்த பூமி என்பதால், அவற்றிலிருந்து பெரிய அளவில் வருவாய் கிடைக்க

வாய்ப்பில்லை. உபயதாரர்கள் மூலமாகத் திருப்பணி நடத்தும் வாய்ப்பு இல்லாத நிலையில், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் தொகுதியிலிருந்து வசதியான உபயதாரர்களைத் தேர்ந்தெடுத்து, நீங்கள் அதனுடைய மதிப்பீட்டிற்குத் தகுந்தாற்போல நிதியைச் சேர்ப்பீர்களேயானால், மூன்றில் ஒரு பங்குத் தொகையை உடனடியாக அரசு கொடுத்து திருப்பணி தொடங்கும் என்பதைத் தங்கள் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *வினா எண் 8, திரு. கோவை தங்கம், மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்.*

முற்பகல் 10-40

8—

முதியோர் இலவச விடுதி

***22818—திரு. கோவை தங்கம்:**

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறையில் முதியோர்களுக்கு இலவச விடுதி நடத்திட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி, சமூக நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பனமரத்துப்பட்டி தொகுதி சட்டமன்ற உறுப்பினரான என்னை அம்மா அவர்களுடைய அமைச்சரவையில் சமூக நலத் துறை அமைச்சராக நியமித்து, தமிழக மக்களுக்குப் பணியாற்றிட ஒரு நல்ல வாய்ப்பினை அளித்த இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு என் குடும்பத்தின் சார்பாகவும், என்னுடைய தொகுதிவாழ் மக்களின் சார்பாகவும், சேலம் மாவட்டத்து மக்களின் சார்பாகவும் இதயபூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். இங்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட கேள்விக்கு இப்போது விடை அளிக்கின்றேன்: